# அறநெறி அமுதம்

ஆன்மிக விழுமியக் காலாண்டிதழ் - 52    ஐப்பசி - மார்கழி 2013

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06


அமுதம் 13    துளி 4

ஆக்கம்: அ. விதுஷிகா - தரம் 9

# உண்மை முயற்சி

மக்கள் நம்மைப் பற்றி நல்லது கெட்டது இரண்டையும் சொல்வார்கள். ஆனால் பிறர் நம்மைப் புகழ்கிறார்களா இகழ்கிறார்களா என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் இலட்சியத்தை நம் முன்னால் வைத்துக்கொண்டு சிங்கம் போல் செயல்பட வேண்டும். ஒருவன் எவ்வளவு மகத்தானவனாக ஆகிறானோ அந்த அளவிற்கு அவன் கடுமையான சோதனைகளைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. இந்த உலகம் பெரியதொரு பயிற்சிக்கூடம். நம்மை வலிமைப்படுத்திக் கொள்வதற்கே நாம் இங்கு வந்திருக்கிறோம்.

ஏமாற்று வேலைகளால் இந்த உலகில் மகத்தான எதையும் சாதிக்க முடியாது என்பது என் திட நம்பிக்கை. இறுதி உண்மை என்ன தெரியுமா? உன்னுள் சாரம் இருக்குமானால் தடைகள் அதிகமாகும் அளவிற்கு அந்தச் சக்தி வெளிப்படும். உனக்குள் அளவற்ற ஆற்றலும் அளவற்ற அறிவும் வெல்ல முடியாத சக்தியும் இருக்கிறது என்று நீயும் நினைப்பாயானால் அந்தச் சக்திகளை உன்னால் வெளியே கொண்டு வர முடியுமானால் **நீயும் என்னைப் போல் ஆக முடியும்.**



***- சுவாமி விவேகானந்தர்***

# பிரார்த்தனை



❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

ருதம் ச விஜ்ஞானமதிச்ரயத் யத்
நிரந்தரம் சாதி-மத்யாந்த-ஹீனம் |
ஸுகம் ஸுரூபம் ப்ரகரோதி யஸ்ய
ஆனந்த-மூர்த்திம் தமஹம் நமாமி |

-விவேகானந்தர் துதி

பொருள்: உண்மைக்கும், மேலான ஞானத்திற்கும் உறைவிட-மாக இருப்பவரும் ஆதி, நடு, அந்தம் அற்றவரும் இன்பத்தையும் இனிமையையும் அளிப்பவருமான பேரானந்த வடிவினரை நான் வணங்குகிறேன்.

வானாளும் நிலைவிட்டு மண்ணுலகை வாழ வைக்கத்
தானாக வந்துதித்த தயாபரனே தத்தமணி
தேனான வேதாந்த சித்தாந்தம் சொன்னவனே
ஆனாத அறங்காத்த ஐயனே விவேகானந்தா!

இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.

அமுதம் 13 துளி 4

## இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 1 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து... | 3 |
| 3. | புறப்படுவோம் புதுமை செய்வோம் - கவிதை | 4 |
| 4. | இராமுவும் ஜக்கியும் - பாப்பா பாப்பா கதை கேளு | 5 |
| 5. | புனித நதி கங்கை (IV) - புண்ணிய நதிகள் | 7 |
| 6. | சுயபுத்தியில்லா நெசவாளி - பஞ்சதந்திரக் கதை | 10 |
| 7. | கடந்த இதழின் குறுக்கெழுத்துப் போட்டி விடைகள் | 12 |
| 8. | கலியுக கற்பகதரு | 13 |
| 9. | ஆளுமை விருத்தி | 16 |
| 10. | கொலு சொல்லும் தத்துவம் | 18 |
| 11. | முண்டக உபநிடதம் | 20 |
| 12. | ஓடும் பேரூந்தில் திருக்குறள் உபதேசம் - சாதனையாளர் | 22 |
| 13. | மனிதனை மனிதனாய் மதிக்கும் மாண்பு - படித்துச் சுவைத்தவை | 25 |
| 14. | அஷ்டாவக்கிரன் - புராணச் சிறுவர் | 27 |
| 15. | யோகம் | 31 |
| 16. | நேர்மையின் விலை - உண்மைச் சம்பவம் | 33 |
| 17. | குறுக்கெழுத்துப் போட்டி | 35 |
| 18. | சர்வதேசத்தில் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் | 36 |
| 19. | செய்திகள் | 38 |

## இதழாசிரியர்களிடமிருந்து...

வாசகர்கள் அனைவருக்கும் நவராத்திரி மற்றும் தீபாவளி நல்வாழ்த்துக்கள். நவயுக இளைஞர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது சுவாமி விவேகானந்தரின் அற்புத வாழ்க்கை. எத்தனையோ மக்கள் அவரது வாழ்விலிருந்தும் போதனையிலிருந்தும் பெற்ற பாடங்களால் தம் வாழ்வையே மாற்றி அமைத்து அரிய சாதனைகளை நிகழ்த்தினர். இதனால்தானோ என்னவோ சுவாமிஜி (சுவாமி விவேகானந்தர்) அவதரித்த இந்திய நாட்டில் அவரது பிறந்த தினமே தேசிய இளைஞர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவரது வாழ்க்கை முழுவதுமே ஒரு சரித்திரமாகியிருக்கிறது. அவரும் எம்மைப் போன்ற ஒரு மனிதர்தான். ஆனால் அவரை ஒரு மகோன்னதமானவராக, புயலைப் போன்ற சக்தி உடையவராக ஆக்கியது எது? அத்தகைய ஆற்றல் அவருக்கு எங்கிருந்து வந்தது? அவரே அதற்குப் பதிலளிக்கிறார். இந்தப் பிரபஞ்சத்தையே அசைக்கக்கூடிய அளவு எல்லையற்ற சக்தி எம் அனைவருள்ளும் இருக்கிறது என்று முழங்கினார்.

எம்முள் அடங்கியிருக்கும் அந்தச் சக்தியை எப்படி வலுவூட்டுவது, எப்படி விழிப்படையச் செய்வது, எப்படிப் பயன்படுத்துவது போன்ற அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் அவரது வாழ்க்கையில் உள்ளது. அத்துடன் அவற்றை அடைவதற்கான சிறந்த வழிகாட்டலாகவும் அமைகிறது சுவாமிஜியின் வாழ்க்கை. அவற்றில் சிலவற்றை நீங்கள் அறநெறி அமுதத்தில் வாசித்து அறிந்திருப்பீர்கள்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் போதனைகளைச் செயற்படுத்துவதற்காக சுவாமி விவேகானந்தரால் ஆரம்பிக்கப் பட்ட இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடத்தின் தலைமையகம் பேலூரில் உள்ளது. அங்கு சுவாமிஜியின் நினைவாக அவரது சமாதியின் மீது எழுப்பப்பட்ட கோவிலையே நீங்கள் அட்டைப் படத்தில் காண்கிறீர்கள். அவரது 150ஆவது ஆண்டு நிறைவையொட்டி சுவாமிஜியின் போதனைகளுடன் சிறப்பிதழ்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன அறநெறி அமுதத் துளிகள். அவ் வரிசையில் இம்முறை வெளிவரும் அறநெறி அமுதத்தின் இச் சிறு துளியை பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.


ஆக்கம்: க. சொரூபன்

# புறப்படுவோம்! புதுமை செய்வோம்!

அச்சமில்லை என்றுகோஷம் போட்டிடுவோமே — நாங்கள்
துச்சமில்லை என்பதனைக் காட்டிடுவோமே
கர்ச்சனைகள் போட்டபடி புறப்படுவோமே — சிவன்
அர்ச்சனையாய் மற்றவரை வாழவைப்போமே

மலைகளென வந்ததடை தாண்டிச்செல்வோமே — சிறு
அலைகளென மோதும் சவால் அனைத்தும் வெல்வோமே
தொலைந்து போன மாண்புகளை மீட்டிடுவோமே - இந்த
நிலைமாற உணர்வோடு தோள் கொடுப்போமே

உண்மையின்பம் எங்களுள்ளம் கண்டிடவேண்டும் - அதன்
தன்மையதை உலகமெங்கும் சொல்லிட வேண்டும்
பண்புமிக்க மாந்தர்களாய் வாழ்ந்திட வேண்டும் - எங்கள்
நண்பரையும் நல்லவராய் மாற்றிட வேண்டும்.




# பாப்பா பாப்பா கதை கேளு

## இராமுவும் ஜக்கியும்




அது ஒரு பெரிய வீடு. அந்த வீட்டிற்கு இராமு என்ற நாய், பல ஆண்டுகள் காவலாக இருந்தது. ஆனால் அதற்கு இன்று வயது போய்விட்டது. முன்புபோல் காவல் காக்க முடியவில்லை. அதனால் வீட்டுக்காரர் ஒரு புதிய நாய்க்குட்டியை வாங்கிக்கொண்டு வந்தார். அது பார்ப்பதற்கு மிக அழகாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தது. அந்த வீட்டில் இருந்த அனைவருக்கும் அந்தப் புது நாய்க்குட்டியை மிகவும் பிடித்துவிட்டது. இராமுவும் அதை அன்போடு வரவேற்றது. தனக்கு ஒரு புது உறவு கிடைத்ததாக எண்ணிச் சந்தோசப்பட்டது.



அந்த வீட்டுக் குழந்தைகள் நாய்க் குட்டிக்கு 'ஜக்கி' என்று பெயர் வைத்து அன்போடு வளர்த்தனர். இராமு, ஜக்கி ஒரு குட்டி என்பதால் அது செய்யும் குறும்புத்தனங்களுக்கு அறிவுரை கூறிக்கொண்டே இருந்தது. அது ஜக்கிக்குப் பிடிக்கவில்லை.


ஒரு நாள் ஜக்கி தெருவுக்கு விளையாடச் சென்றது. அப்போது இராமு, "ஜக்கி, தெருவுக்குச் செல்லாதே. வாகனங்கள் வரும். நீயோ குட்டியாக இருக்கிறாய். யாராவது கவனிக்காது அடித்துவிட்டுச் சென்றுவிடுவார்கள். போகாதே" என்று தடுத்தது. ஜக்கியோ அது சொன்னதைக் கேளாமல் விளையாடத் தெருவுக்கு ஓடிச் சென்றது.





அது விளையாடிக் கொண்டிருக்கும்போது மிதிவண்டியில் வந்த சிறுவனொருவன் ஜக்கியைக் கவனிக்காமல், அதன் குட்டிக் காலுக்கு மேலாகச் சில்லை ஏற்றி மிதித்துவிட்டுச் சென்றுவிட்டான். ஜக்கிக் குட்டி வலியால் துடித்துக் கத்தியது. இராமு உடனே ஓடிச் சென்று ஜக்கியை இழுத்து வந்து ஜக்கியின் காலை நாக்கால் நக்கி விட்டது. ஜக்கி வலியால் அழுதுகொண்டே இருந்தது.

இராமு, "நான் அப்போதே சொன்னேன் தானே, போகாதே என்று. கேட்டாயா? பார், இப்போது உன் காலில் காயம். சிறு பிள்ளைகள் நீங்கள் அனுபவம் இல்லாதவர்கள். பெரியவர்கள் எங்களுக்கு அனுபவம் அதிகம். உங்கள் நன்மைக்காகத் தானே அறிவுரை கூறுகிறோம். இனிமேலாவது கவனமாக நடந்துகொள்" என்று ஆறுதல் கூறியது.



ஜக்கியும் தன் தவறை உணர்ந்து; "உண்மைதான். இனிமேல் நீங்கள் சொல்லுவதை மீறி நான் எதுவும் செய்ய மாட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கூறியது. பெரியவர்கள் கூறும் அறிவுரையைக் கேட்டு நடந்தால் நமக்குத்தான் நன்மை.

**"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்"**

அதிகாரம் செலுத்தும் முன் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ள வேண்டும். பொறாமை அகலாதவரையில், தலைவர்களுக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ளாதவரையில் ஸ்தாபன ரீதியான ஆற்றலுக்கு இடமில்லை.

*- சுவாமி விவேகானந்தர்*

ஆக்கம்: சோ. பிரசோபிதா

# புண்ணிய நதிகள்




புனித நதி கங்கை - பாகம் IV


அநேகமான இந்துக்களின் வீடுகளில் கங்கா நீரை ஒரு செம்பில் பூஜையறைகளில் வைத்திருப்பர். வீட்டில் யாருக்காவது நோய் ஏற்பட்டாலோ, திருமணச் சடங்குகளிலோ மற்றும் ஏனைய சமயச் சடங்குகளின் போதோ அந் நிகழ்வுகளைப் புனிதப் -படுத்துவதற்காக இந்நீரைப் பயன்படுத்துவர்.

ஒரு இந்து இறக்கும் தறுவாயிலும் அவனது வாயில் கங்கா நீரைப் பருக்குவர். இதனால் அவன் முக்தி அடைவான் என்பது ஐதீகம். இந்துக்கள் தமது வயதான, இறுதிக் கால கட்டங்களில் இறைவாழ்க்கையை மேற்கொள்வதற்காகக் கங்கைக் கரையில் சென்று வசிப்பது வழக்கம். புராணங்களிலும் இதிகாசங்களிலும், ஒருவர் கங்கைக் கரையில் இறப்பதால் உயர் உலகங்களை அடைகிறார், அல்லது முக்தியடைகிறார் என்று கூறப்பட்டுள்ளது. இறந்தவர்களின் அஸ்தியைக் கங்கையில் கரைப்பதாலும் முக்தியடைவர் என்பது நம்பிக்கை.

## கங்கையின் வரைபடம்





இந்துக்கள் கூடுதலாக வாரணாசியிலும் ஹரித்துவாரிலும் இறுதிக் கிரியைகளைச் செய்வது வழக்கம். காசியில் இறந்த சடலங்களை எரித்து அஸ்தியை கங்கையில் கரைப்பர். ஹரித்துவாரில் இறந்த சடலத்தை ஒரு பாரமான பொருளுடன் கட்டிக் கங்கையில் விட்டு விடுவர்.



எமது குருதேவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் கங்கைக் கரையிலுள்ள தட்சிணேஷ்வரக் காளி கோயிலுக்கருகிலே வசித்து வந்தார். அங்கேயே பல சாதனைகளையும் தவங்களையும் மேற் -கொண்டார். இவ்வாறு குருதேவரின் வாழ்க்கை வரலாறு கங்கையுடன் தொடர்புடையது. அதில் ஒன்றை நாம் இங்கு பார்ப்போம்.

ஒரு முறை பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் காசிக்குத் தீர்த்த யாத்திரை சென்றிருந்தார். ஒரு தோணியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு கங்கைக் கரையிலுள்ள மணிகர்ணிகை முதலான புனித படித்துறைகளைத் தரிசித்துக் கொண்டிருந்தார். மணிகர்ணிகைப் படித்துறை வரும் போது அங்கு சிலர் சடலங்களை எரித்துக் கொண்டிருந்தனர். அதிலிருந்து புகை எழுந்து கொண்டிருப்பதைப் பார்த்ததுமே குருதேவர் பரவச நிலையை அடைந்துவிட்டார்.

அப்போது அவர் அங்கு ஓர் அற்புதக் காட்சியைக் கண்டார். அதைப் பின்வருமாறு கூறுகின்றார். "உயரமான ஒரு வெண்ணிற மனிதர் மஞ்சள் நிறச் சடாமுடியுடன் கம்பீரமாக நடந்து, அங்கே எரிந்து கொண்டிருந்த சிதைகள் ஒவ்வொன்றின் அருகிலும் சென்றார். சிதையிலுள்ள அந்த உயிரை எழுப்பினார். அதன் செவியில் தாரக பிரம்ம மந்திரத்தை ஓதினார். சர்வ வல்லமை பெற்ற மகா சக்தியானவள், மகாகாளியின் உருவத்தில், சிதையின் மறுபக்கத்தில் அமர்ந்து அந்த உயிர்களைப்



பிணைத்திருக்கும் ஸ்தூல, சூட்சும, காரண, சம்ஸ்கார பந்தங்களை எல்லாம் நீக்கினாள். தன் கைகளினாலேயே முக்தியின் வாசலைத் திறந்து அந்த உயிர்களை அகண்ட சச்சிதானந்தப் பொருளில் ஒன்றச் செய்தாள். காலங்காலமாக யோகமும் தவமும் செய்து அடையக் கூடிய அத்வைத அநுபவத்தின் பேரின்பத்தைக் காசி விஸ்வநாதர் அவ்வாறு அவ்வுயிர்களுக்கு அங்கேயே அப்போதே வழங்கியதை நான் கண்டேன்'' என்றார்.

காசியில் இறப்பவர்களுக்கு காசி விஸ்வநாதர் முக்தியளிப்பதாகக் காசி காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதை எவ்வாறு செய்கின்றார் என்று விளக்கமாகக் கூறப்படவில்லை. குருதேவர் கண்ட காட்சியினால் அது நிரூபிக்கப்பட்டுள்ளது.

கங்கை என்ற இந்தப் புனித நதி நாம் வாழும்போதும் இறக்கும்போதும் எமக்கு நன்மை தரும் நதி. இனிவரும் இதழ்களில் மற்றொரு புண்ணிய நதியாகிய யமுனையைப் பற்றிப் பார்ப்போம்...

*****

**நீங்களும் எழுதலாம்......**

*அறநெறி அமுதத்தில் நீங்களும் எழுத விரும்புகிறீர்களா? அப்படியாயின் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:*


மாணவர்களின் பண்பு வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பயன்படக் கூடிய

1. கதை
2. கட்டுரை
3. படித்துச் சுவைத்தவை
4. கேட்டுச் சுவைத்தவை
5. உண்மைச் சம்பவங்கள்

ஆகியவற்றை எழுதி "அறநெறி அமுதம்" எனக் குறிப்பிட்டு முன் அட்டையில் உள்ள முகவரிக்கு அனுப்பவும். பொருத்தமான ஆக்கங்கள் உரிய திருத்தங்களுடன் பிரசுரிக்கப்படும். ஆக்கத்தை அனுப்பும்போது உங்களைப் பற்றிய விபரத்தையும் எழுதி அனுப்புங்கள். இதழாசிரியர்களின் முடிவே இறுதியானது.


## பஞ்சதந்திரக் கதை

நெசவாளி மந்தரகன் ஒரு நல்ல உழைப்பாளி. ஒரு நாள் சமயம் பார்த்து அவனது கைத்தறி உடைந்துவிட்டது. இனி புதிய கைத்தறியை மரத்திலிருந்து செய்ய வேண்டும்.




அதனால் கையில் கோடரியை எடுத்துக்கொண்டு மரத்தைத் தேடிச் சென்றான். அவ்வூரில் கடற்கரைக்கு அருகில் ஒரு மரம் இருந்ததைப் பார்த்தான். அதை வெட்டினால் தேவையான தடிகளைப் பெற்றுவிடலாம் என்று நினைத்தான்.

உடனே தோளில் இருந்த துணியைத் தலை -யில் சுற்றிக் கொண்டான். பின் கோடரியைத் தீட்டிக் கொண்டு மரத்தை வெட்டச் சென்றான். அதைப் பார்த்து அம் மரத்தில் இருந்த தேவதை "ஐயோ! இந்த மரத்தை வெட்ட வேண்டாம்" என்று கத்தியது. "நான் நெடுங்காலமாக இதில் வாழ்ந்து வருகிறேன். கடற்கரை எனக்குச் சுகமாக இருக்கிறது. என் சுகவாழ்வைக் கெடுத்து விடாதே!" என்று கூறியது. அதற்கு நெசவாளி, "நான் என்ன செய்வது? என் தறியில் உள்ள மரப் பகுதிகள் உடைந்து விட்டன. அதனால் நெசவுத் தொழில் நின்று விட்டது. ஆதலால் வீட்டில் எல்லோரும் பட்டினியாக உள்ளனர். நீ வேண்டுமென்றால் இன்னொரு மரத்திற்குப் போய்விடு" என்றான்.



அதற்கு தேவதை, "நீ பொறுப்பாகப் பேசுகிறாய். அது எனக்குப் பிடித்திருக்கிறது" என்று கூறியது.

"அதனால் உனக்கு விரும்பிய வரத்தைக் கேள் தருகிறேன்" என்றது. "நான் மனைவியிடமும், நண்பனிடமும் கேட்டுச் சொல்கிறேன்" என்று சொன்னான் நெசவாளி.

முதலில் தன் நண்பனான நாவிதன் வீட்டுக்குச் சென்று அவனிடம் ஆலோசனை கேட்டான். அதற்கு நண்பன் "ஒரு இராஜ்ஜியமே வேண்டும் என்று கேள்" என்றான். "நீ அரசனாவாய், நான் மந்திரி ஆவேன்" என்றான். "சரி, இது மிகவும் நல்ல யோசனைதான். நான் என் மனைவியிடமும் கேட்டு வருகிறேன்" என்று மனைவியிடம்சென்றான். மனைவியிடம் நடந்ததைக் கூறி ஆலோசனை கேட்டான்.



அதற்கு மனைவி "அரச பதவி ஆபத்தாயிற்றே! அநேக தொல்லைகள் ஏற்படும். சண்டைகள், சச்சரவுகள் மற்றும் பல கேடுகள் எல்லாம் நிறைந்தது. ஒருபோதும் திருப்தியுடன் வாழமுடியாது" என்றாள். "நீ சொல்வதும் சரிதான். வேறு என்ன கேட்பது? என்றான்" கணவன். நாள்தோறும் துணி நெய்வதன் மூலம் தான் நமக்கு வருமானம் கிடைக்கிறது. உங்களுக்கு இன்னொரு தலையும், மேலும் இரண்டு கைகளும் தரும்படி கேளுங்கள்" என்று சொன்னாள் மனைவி. "அவ்வாறு கிடைத்தால் ஒரே நேரத்தில் இரண்டு நெசவு செய்து இரட்டிப்பாக வருமானம் பெறலாம்" என்றாள்.

உடனே இந்த யோசனை நல்ல யோசனை என்று நினைத்தான் நெசவாளி. தேவதையிடம் சென்றான். "எனக்கு மேலதிகமாக ஒரு தலையும் மேலும் இரண்டு கைகளும் வேண்டும்" என்று தேவதையிடம் கேட்டான் நெசவாளி. தேவதையும் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்தாள்.

அவனும் வரம் பெற்ற மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான்.

இரண்டு தலைகளுடனும் நான்கு கைகளுடனும் அவன் வருவதைக் கண்ட ஊர் மக்கள் அவன் ஓர் அரக்கன் என்று நினைத்தனர். உடனே எல்லா மக்களும் சேர்ந்து அவனுக்குக் கல் எறிந்து ஊரை விட்டுத் துரத்தி விட்டனர்"



சுய புத்தியைப் பயன் -படுத்தாமல் மற்றவர்கள் கூறிய படி வரம் கேட்டதால் நெசவாளி ஊரை விட்டே போக வேண்டி வந்துவிட்டது!

**யார் என்ன கருத்துக்களைச் சொன்னாலும் நாங்கள்தான் சுயமாக யோசித்துச் செயற்பட வேண்டும்**

## கடந்த இதழில் பிரசுரிக்கப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வே | 2 த | 3 வி | 4 யா | ச | 5 ர் |
| 6 தா | த் | ரு | வி | ■ | ல |
| ர | ■ | 7 தி | த் | ர் | மு |
| ண் | ■ | பி | ■ | ■ | ரு |
| ய | ■ | ■ | 8 யை | 9 து | தி |
| 10 ம் | ண | ய | மா | ரா | ■ |

ஆக்கம்: உ. சசிதரன்




பிராமணர் ஒவ்வொருவனுக்கும் அவனது வாழ்வில் முக்கிய அங்கம் அவனது உபநயனச் சடங்காகும். பிறப்பினால் பிராமணனானாலும், விக்கிரகங்களைத் தொட்டு வணங்க வேண்டுமானால் அவன் உபநயனச் சடங்கினைப் பூர்த்தி செய்து பூணூல் அணிந்திருக்க வேண்டும்.

கதாதரனின் அண்ணனான இராம்குமார், கதாதரனுக்கு உபநயனச் சடங்கைச் செய்வது என முடிவெடுத்து அதற்கான காரியங்களை நிறைவேற்றத் தொடங்கினார். (இராமகிருஷ்ணரின் இளமைப்பெயர் கதாதரன்). ஆனால் கதாதரனின் உபநயனச் சடங்கில் ஒரு சிக்கல் இருப்பதை இராம்குமார் அறிந்திருக்கவில்லை.

கதாதரன் பிறந்ததிலிருந்தே அவனிடம் வாஞ்சை கொண்டிருந்தாள் 'தனி' என்ற பெண். அவள் கதாதரனின் தாயான சந்திரமணியின் தோழி. அவள் கொல்லர் இனத்தைச் சேர்ந்தவள். ஒருநாள் அவள் கதாதரனிடம், "கதாயீ, உனது உபநயனச் சடங்கின்போது என்னிடம் முதற் பிச்சை ஏற்று என்னை 'அம்மா' என்று அழைப்பாயானால் நான் மிகவும் சந்தோசப்படுவேன் தெரியுமா?" என்று மிகுந்த அன்புடன் வேண்டினாள். தன்மீது அவளுக்கு இருந்த உளமார்ந்த அன்பைக் கண்ட கதாதரன், அவளது விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாக உறுதி அளித்தான்.



அண்ணன் இராம்குமார் உபநயனச் சடங்கிற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கும் போது ஒரு நாள் தக்க சமயம் பார்த்து, தான் அளித்த வாக்குறுதியைப் பற்றி இராம்குமாரிடம் கதாதரன் தெரிவித்தான். ஆனால் இராம்குமாரோ கதாதரனின் வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது என மறுத்து விட்டார். ஏனென்றால் தனியின் குலம் தாழ்ந்த குலமாகக் கருதப்பட்டது. கதாதரனோ, "தனியிடமிருந்து பிச்சை ஏற்கத் தவறினால் நான் சொல் தவறியவன் ஆவேன். சத்தியத்திலிருந்து தவறியவன் பூணூல் அணியத் தகுதி அற்றவன். எனவே நான் எப்படிப் பூணூல் அணிய முடியும்?" என்று வாதம் செய்தான்.


இறுதியில் கதாதரனின் உறுதியே ஜெயித்தது. சாஸ்திர சம்பிரதாயங்களுக்கேற்பச் சடங்கு செய்து, பூணூல் தரித்து, தனியிடமிருந்து முதற்பிச்சை ஏற்றான் கதாதரன். தன் வாழ்வே புனிதம் பெற்று விட்டதாகப் பேரானந்தம் அடைந்தாள் தனி.



கதாதரன் உபநயனத்திற்குப் பின்னர், சந்தியாவந்தனம், பூஜை போன்ற ஆன்மீகச் சாதனைகளில் ஆழ்ந்து ஈடுபடலானான். இதனால் கதாதரனிடம் இயல்பாகக் காணப்பட்ட ஆன்மீக உணர்வுகள் விழித்தெழுந்தன. கதாதரனின் மனதில் புதிய பக்தி வேகம் பிறந்தது. அவன், தினமும் சந்தியாவந்தனம் போன்றவற்றைச் செய்த பின்னரும் நீண்ட நேரம் பூஜை, தியானத்தில் ஈடுபடலானான்.

கதாதரனின் பக்தியின் ஆழம், இறைவன் மேல் கொண்ட அப்பழுக்கற்ற தீவிர அன்பு, ஆகியனஅந்த ஆண்டு வந்த சிவராத்தி தினத்தில் வெளிப்பட்டது. சிவராத்திரி தினத்தில் ஊரார், சிவபெருமானின் திருவிளையாடல்கள் தொடர்பான மேடை நாடகங்களைப் பார்த்தபடி கண் விழிப்பது என்று முடிவு செய்தனர். ஆனால் கதாதரனோ தன் வீட்டில், பூஜை, ஜபம் என ஆன்மீக சாதனைகளில் ஈடுபட்டுக் கண்விழிப்பது என முடிவு செய்தான்.


திடீரென மேடை நாடகத்தில் சிவன் வேடத்தில் நடிக்க வேண்டியவர் நேர்வாய்ப்பட்டுவிட்டார். அவருக்குப் பதிலாக யாரை நடிக்க வைக்கலாம் என நாடகக் குழுவினர் சிந்தித்த போது கதாதரனின் நடிப்புத் திறன் அவர்களது நினைவுக்கு வ்ந்தது. எனவே அவனை வற்புறுத்தி, நடிப்பதற்புச் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டனர். கதாதரனுக்கு சிவன் வேடம் அணிவித்தனர். ஜடாமுடி, உருத்திராட்ச மாலை, திருநீறு ஆகியவற்றைத் தரித்து சிவவேடத்துடன் மேடையில் தோன்றினான் கதாதரன். மேடைக்கு வந்த கதாதரனுக்கோ சிந்தனை நாடகத்திலிருந்து விலகி சிவ-பெருமானை நோக்கிச் செல்லலாயிற்று.



கொஞ்சம் கொஞ்சமாகப் புற நினைவை இழந்து சிவ நினைவிலேயே மூழ்கிப் போனான் கதாதரன். அவன் மீண்டும் சுய நினைவைப் பெறுவதற்கு நீண்ட நேரம் ஆயிற்று. இதனால் நாடகம் தடைப்பட்டது. ஆனால் நாடகம் பார்க்க வந்த மக்களோ சிவ-பெருமானையே மேடையில் கண்டது போல் ஆனந்தம் எய்தினர். அனைவரது மனங்களிலும் பக்தி நிறைந்தது.

(மிகுதி 40ஆம் பக்கத்தில்)

ஆக்கம்: சி. ஆரணி



# இன்றைய இளைஞர்களுக்கு ஆளுமை விருத்தி

சென்ற இதழில் ஆளுமைவிருத்தி பற்றிய முன்னுரையை அறிந்து கொண்டீர்கள்.

ஒருவன் குறிப்பிட்ட சூழ்நிலையில் நடந்து கொள்ளும் விதம் அவனுடைய மனநிலையைப் பொறுத்து அமைகின்றது. எனினும் அச்சந்தர்ப்பத்தில் அவனுடைய வெளித்தோற்றம், பேச்சு அல்லது நடந்து கொள்ளும் விதம் இவை அம்மனிதனின் ஆளுமையைப் பிறருக்கு வெளிப்படுத்திவிடுகின்றது.

உண்மையான ஆளுமைவிருத்தி என்பது ஒருவருடைய ஆழ்ந்த மனப்பாங்கைக் குறிக்கின்றது. எனவே நம்முடைய ஆளுமையை அறிந்து கொள்வதற்கு நமது மனதைப்பற்றி ஓரளவேனும் தெரிந்து கொள்வது அவசியம்.

நம்மில் ஒவ்வொருவருக்கும் நிறைவேற்ற வேண்டிய சவால்கள் பல உண்டு. வாழ்க்கை மிகவும் உன்னதமாகவும் சீரும் சிறப்புமாகவும் இருக்க வேண்டும் என்ற உள்மன உந்துதல் உண்டு.

தனிமனித உயர்வை எட்ட ஒவ்வொருவரும் விரும்புகின்றோம். இது உள் மன இயக்கமானதால் வெளிப்படையாகத் தெரிவதில்லை. பெரும்பாலான சமயங்களில் நமது மனம் நாடுவதையே நாம் கேட்கும் அடிமைகளாக மாறி விடுகின்றோம்.



எனினும் சிறந்த முறையில் மனதைச் செம்மைப்படுத்துவோமாயின் மனதின் சொல் கேட்டு நடப்பதில் தவறேதும் இல்லை. அவை எமது வாழ்வைக் கட்டுப்படுத்துகின்றன, எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன.

நமது உள்மனத்தின் கண்ணாடியாக எண்ணங்கள் , பிரதிபலிக்கப்படுகின்றன. நல்லெண்ணங்கள் எமது வாழ்க்கையில் இலட்சியத்தை நோக்கி நாம் பயணம் செய்வதற்கு வழிகாட்டுகின்றன. ஆனால் எதிர்மறையான எண்ணங்களால் மனம் தூண்டப்படுமிடத்து எமக்குக் குழப்பமான மனநிலையே உதித்துக் கொண்டிருக்கும்.



இதனையே சுவாமி விவேகானந்தர் "நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய். உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்" என்கிறார்.

ஆக இன்றைய இளைஞர்களாகிய எம்மைப் பொறுத்தவரையில் வெற்றியடைய, மனத்தளவில் வெற்றி பெற்றவர்களைப் படம் பிடித்துக்கொள்ளுங்கள். மனதளவில் தோல்வி என்றால் இப்போது மட்டும் அல்ல வருங்காலத்திலும் தோற்றுப் போவீர்கள்.

ஒரு மனிதனின் ஆளுமை வளர்ச்சியில் மனதின் பங்கு எத்தகையது என்பது விளங்குகின்றதல்லவா! மனதைச் செம்மைப்படுத்த யாது செய்தல் வேண்டும்? அடுத்த இதழில் காண்போம்...

பலவீனமான மனத்தையும் அதைரியத்தையும் உதைத்துக் கீழே தள்ளி எழுந்து நின்று " **நான் வீரன். நான் தீரன்**" என்று சொல். எந்தக் காலத்திலும் பலவீனம் உன் மனத்தை வெல்லாதபடி பார்த்துக்கொள்.

*-சுவாமி விவேகானந்தர்*

## கொலு சொல்லும் தத்துவம்

நவராத்திரியின் சிறப்பம்சம் கொலு வைப்பதாகும். இதற்காக ஒன்பது படிகளை அமைத்து அவற்றில் உருவப் பொம்மைகளை அடுக்குவர். ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு அறிவுக்குரிய ஜீவன்களின் பொம்மைகள் வைக்கப்படும். அவை எவை என்று உங்களுக்குத் தெரியுமா?


1ஆம் படி - ஓரறிவு ஜீவன்களான தாவரங்கள்

2ஆம் படி - ஈரறிவுடைய நத்தை, சங்கு போன்றவை

3ஆம் படி - மூவறிவுடைய கறையான், எறும்பு போன்றவை

4ஆம் படி - நான்கறிவுடைய நண்டு, வண்டு போன்றவை

5ஆம் படி - ஐந்தறிவுடைய மிருகங்கள், பறவைகள்



6ஆம் படி - ஆறறிவுடைய மனிதர்கள்

7ஆம் படி - உயர் நிலை அடைந்த சித்தர்கள், மகரிஷிகள்

8ஆம் படி - தேவர்கள், நவக்கிரகங்கள், திக்பாலர்கள்

9ஆம் படி - மும்மூர்த்திகள், அம்பிகையர்




மனிதன் படிப்படியாக உயர்ந்து தெய்வ நிலையை அடையும் வழியையே கொலு விளக்குகிறது. இதனைப் பெரியோர்கள் பின்பற்றுவதும் சிறுவர்கள் அறிந்து மகிழ்வதும் நன்மை தரும்! பக்தியை வீட்டில் நிறைக்கும்!!


*மூலம்: பக்திவிஜயம்*

ஆக்கம்: ஜெ. காயத்திரி, தரம் 9

# முண்டக உபநிடதம்

சென்ற இதழில் முண்டக உபநிடதத்தில் அதன் பெயர், அது அறியப்பட்டு வந்த பரம்பரை மற்றும் இறைவனின் படைப்பு பற்றிப் பார்த்தோம்.

அடுத்து, முண்டக உபநிடதத்தில் கூறப்பட்டுள்ள **அக்ஷர-பராவித்யை** பற்றிக் கவனிப்போம். அக்ஷர-பராவித்யை என்பது செல்வத்தையும் செயல்திறனையும் ஆன்ம சக்தியின் வாயிலாக பெறுவதற்கான வித்தையாக இருந்திருக்க வேண்டும். அதனால் தான் இதில் **உலகியல் அறிவு** பற்றியும் **கடவுள்** பற்றியும் சொல்லப்பட்டுள்ளது.



## *1. உலகியல் அறிவு*

உலகியல் அறிவில் எண்ணற்ற துறைகள் உள்ளன. இவற்றின் வளர்ச்சியால் இன்று எண்ணற்ற எந்திரங்கள் உள்ளன. ஆனால் அன்று இருந்தவை யாகங்கள், கர்மங்கள், பல்வேறு சடங்குகள், வித்யைகள் போன்றவையே. இவற்றின் மூலம் இவ்வுலகில் சிறப்பாக வாழலாம்.



உலகியல் ஆசைகளுக்காக நாம் யாகங்கள், கர்மங்கள் போன்றவற்றைச் செய்கிறோம். அதன் பலனாக அவ் ஆசைகள் பூர்த்தியாகின்றன. அத்துடன் தான தர்மங்கள் மூலம் எமக்குக் கிடைக்கப்பெறும் புண்ணியங்களின் பலனாக நமக்கு சொர்க்கம் கிடைக்கிறது. அப்புண்ணிய காலம் நிறைவு பெற்றவுடன் சொர்க்கத்திலிருந்து நாம் திரும்பி விடுகிறோம். எனவே சொர்க்க வாழ்வும் நிலையற்றது.

நிலையான பரம்பொருளை அடைய வழி துறவு மற்றும் தவமே. நிலையான பரம்பொருளை அடைய முற்படும் நாங்கள் முதலில் எம்மைப்பற்றி அறிய வேண்டும். நாம் தெய்வீக அம்சம் உடையவர்கள்; தெய்வத்தின் குழந்தைகள். இதன் பொருள் என்ன? சுவாமி விவேகானந்தர் அழகாக விளக்குகிறார்.



**"நீ எதுவாக நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீயே உன்னைப் பலவீனன் என நினைத்தால் அவ்வாறே ஆகிறாய். மாறாக நான் எல்லாம் வல்ல இறைவனின் குழந்தை. எதைச்செய்யவும் நான் தயாராக இருக்கிறேன். என்னால் எதையும் செய்யமுடியும் என நினைத்தால் நீ நினைத்தது போல ஆகிறாய்"**

***2. கடவுள்***



இறைவன் ஒளிமயமானவர்; எல்லாவற்றிற்கும் காரணமாக உள்ளவர்; பிரபஞ்சமாக உள்ளவர். நாம் வாழ வழியும் இறைவனே.
இறைவனே இயற்கையின் தலைவர்.

இறைவனை அடைவது வில்லால் அம்பெய்து இலக்கை வீழ்த்துவதற்கொப்பாகக் கூறப்பட்டுள்ளது. ஓங்கார மந்திரமே வில், ஆன்மா அம்பு, இறைவனே இலக்கு என்று இந்த உபநிடதத்தில் சொல்லப்படுகிறது. அம்பை எய்பவன் அலைபாயாத மனத்தினனாக இருக்க வேண்டும். அம்பைப்போல் அந்த இலக்குடன் ஒன்ற வேண்டும். அதாவது நாம் இறைவனுடன் ஒன்ற வேண்டும்.



அடுத்து ஆன்ம அனுபூதி பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஆன்ம அனுபூதியின் முதற் படி பேச்சுக் கட்டுப்பாடு; இரண்டாம் படி பிரணவ தியானம்.


"ஆன்ம அனுபூதி பெற்றவனே இறையனுபூதிக்குத் தயாராகிறான்; இறையனுபூதி அடைகிறான்"

ஆக்கம்: த. கௌரீஷ்வரி-

## சாதனையாளர்

‘எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணம், புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல், நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன்தான் சிறப்பாகப் பணியாற்றுகிறான். உலகத்தையே மாற்றி அமைக்கக்கூடிய வகையில் வேலை செய்யும் சக்தி அத்தகையவனிடமிருந்தே வெளிப்படுகிறது.’ இது சுவாமிஜியின் வீரமொழி.

ஆனால், சமூகத்தின் பார்வையில் பணம், நேரம், சமூகத்தின் அங்கீகாரம் போன்றவை இல்லாவிட்டால், சேவை சாத்தியமற்றதாகக் கொள்ளப்பட்டுப் புறக்கணிக்கப்படுகிறது. இக்கருத்தினை உடைத்தெறிந்து **“சேவை செய்வதற்கு எவ்விதமான முதலீடும் தேவையில்லை. மாறாக, ‘சேவை செய்ய வேண்டும்’ என்ற எண்ணம் ஒன்றே போதுமானது”** என்று சமூகத்திற்கு உரத்துச் சொல்கிறார் இந்தச் சேவை உள்ளம் கொண்ட பேருந்து நடத்துனர் திரு. கனகசுப்பிரமணி.




இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டி செல்லும் பேருந்தில் தினமும் பயணம் தொடங்கியதும் பயணச் சீட்டுக்களை விநியோகித்துத் தனது தொழிலைச் செவ்வனே முடிக்கும் இவர், பேருந்து தற்காலிகமாகத் தரித்து நிற்கும் சில நிமிடங்களையே இவ் அரிய செயலுக்கான வாய்ப்பாகப் பயன்படுத்துகிறார். “அன்புப் பயணிகளுக்குக் காலை வணக்கம்!” என்று ஆரம்பித்து, அன்று காலை தான் கற்ற திருக்குறள் ஈரடியையும் அதன் விளக்கத்தையும் பயணிகளுக்கு விளக்குகிறார்.


முன்பொருநாள் பயணி ஒருவர், பேருந்தில் எழுதப்பட்டிருந்த திருக்குறள் ஒன்றை வாசித்து விட்டு, "இதன் பொருளைப் பேருந்து ஓட்டுனரோ நடத்துனரோ அறிவார்களோ தெரியவில்லை" என்று கேலியாகக் கேட்டிருந்தார். அதையே சவாலாக ஏற்று இன்று-வரை இத் தொண்டினைச் செய்து வருகிறார்.

மேலும் பேருந்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகப் பேணும்படி வேண்டுகோள் விடுப்பதோடு பிளாஸ்ரிக் பாவனையினால் ஏற்படும் தீங்கு பற்றியும் வீதிப்பாதுகாப்பு பற்றியும் பயணிகளுக்கு அறிவுறுத்தி அதுபற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றார். அத்துடன் இரத்த தானத்தின் அவசியத்தையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்துகின்றார்.



தினமும், பிறந்த நாளை அல்லது திருமண நாளைக் கொண்டாடும் பயணிகள் யாருக்காவது ஒரு திருக்குறள் புத்தகத்தைப் பரிசாக அளிக்கிறார். அவ்வாறு எதுவும் அமையாதவிடத்து ஒரு ஆசிரியருக்கோ அல்லது காவல் துறை உத்தியோகத்தருக்கோ அல்லது மாணவருக்கோ அதைப் பரிசாக அளிக்கிறார். இவ்வாறாகத் தினமும் திருக்குறள் புத்தகங்களைப் பயணிகளுக்குப் பரிசளிக்கும் கொள்கையை இவர் பத்து வருடங்களாகக் கடைப்பிடித்து வருகின்றார்!

இந்தத் திருக்குறள் சிந்தனையின் பின் பயணத்தைத் தொடரும் பயணிகள் மத்தியில் ஒரு புத்துணர்வு தென்படுகிறது. கனகசுப்பிரமணி வேண்டுவதும் இதுவே - அறிவுபூர்வமானதும் சிநேக பூர்வமானதுமான ஒரு பேருந்து பயணம். அவரைப் பொறுத்தமட்டில் பயணிகள் அவரது குடும்பத்திற்கு நிகரானவர்கள்.



கனகசுப்பிரமணி இந்தத் திருக்குறள் சேவையுடன் நின்றுவிடாது தனது ஓய்வு நேரங்களில் தான் நிறுவிய 'செந்தமிழ் அறக்கட்டளை' எனும் அமைப்பினூடாகச் சிறைச்சாலைக் கைதிகளுக்கு உரை நிகழ்ச்சியை நிகழ்த்துவதை வழமை -யாகக் கொண்டுள்ளார். "சிறைக்கைதிகள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாது திருந்தி வாழச் செய்வதற்கு என்னாலான ஒரு முயற்சியே இதுவாகும்" என கனகசுப்பிரமணி குறிப்பிடுகின்றார்.


இவ் அமைப்பினூடாக சிறைச்சாலைகளில் கர்நாடக சங்கீத வகுப்புக்களை நடாத்துவதுடன் கைதிகளுக்கிடையே பாட்டுப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டி என்பவற்றையும் நடாத்தி அவர்களை ஊக்குவிக்கிறார். இவை தவிர, தனது நண்பரான மைக்கேல் என்பவருடன் இணைந்து வயதான சிறைக்கைதிகளுக்கு வயோதிபர் இல்லங்களில் புனர்வாழ்வு அளித்து வருகின்றார்.

தனது 56ஆவது வயதிலும் மிகவும் துடிப்பாக விளங்கும் இவர், மாநிலப் போக்குவரத்துக் கூட்டுத்தாபனம் நடாத்தும் பயிற்சிக் கூடங்களில் தன்னுடைய சகாக்களுக்கு எழுச்சியூட்டும் உரைகளை நிகழ்த்துவதும் உண்டு. தனது கஷ்டகாலங்களில் உதவிய ஆசிரியர்கள் அளித்த ஊக்கமே தன்னை இந்தச் சமூகத்திற்கு ஏதாவது செய்தாக வேண்டும் எனத் தூண்டியதாக உணர்ச்சி பொங்கக் கூறுகிறார் கனகசுப்பிரமணி.

'மற்றவர்களின் நன்மைக்காகத் தங்களுடைய இதயத்தின் இரத்தத்தைச் சிந்தி, பாதை அமைப்பவர்கள்தான் பெரியோர்கள் ஆவார்கள். நாமும் நாம் வாழும் சமூகத்திற்கு நன்மை செய்ய இப்பெரியாரின் வழி பற்றி எம்மால் முடிந்தளவு முற்படுவோம்!



# மனிதனை மனிதனாய் மதிக்கும் மாண்பு



சுவாமி விவேகானந்தர் சிறுவனாக இருந்த காலம் முதலே ஒரு சாதிக்கும் இன்னொரு சாதிக்குமிடையான ஏற்றத் தாழ்வுகளை, மனிதன் ஏற்படுத்திய செயற்கைப்பிரிவு என எண்ணினார். சமுதாயப் பழக்கவழக்கங்களைப் பார்த்துக் கேள்வி கேட்டார்.

சுவாமி விவேகானந்தரின் இளமைப் பெயர் நரேந்திரன். நரேந்திரனின் தந்தை விஸ்வநாத தத்தரிடம் சட்ட உதவி கேட்டுப் பல ஜாதிகளைச் சேர்ந்த, பல மதங்களைச் சேர்ந்த கட்சிக்காரர்கள் அவரின் வீட்டுக்கு வருவதுண்டு. வெவ்வேறு ஜாதியினருக்கென அவர்களது வீட்டில் தனித்தனியே புகைக் குழாய்கள் வைக்கப்பட்டிருந்தன. புகைக் குழாய்களுக்கு 'ஹூக்கா' என்று பெயர். இவற்றைப் பார்த்ததும் நரேனுக்கு வேடிக்கையாக இருந்தது. தங்கள் ஜாதியிலிருந்து மாறுபட்ட ஜாதியைச் சார்ந்த ஒருவருடைய குழாயில் வாய் வைத்து உறிஞ்சிப் புகை பிடித்தால் என்ன தீங்கு வரும்? இதை 'பிலே' (நரேந்திரனின் செல்லப் பெயர்) தானே சோதித்தறிய விரும்பினான். அதன்படி ஒருநாள் அவன் புகைக் குழாய் -களை எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைத்து வைத்து, ஒவ்வொன்றிலும் வாய் வைத்து உறிஞ்சினான். அப்படி அவன் உறிஞ்சிப் பார்த்தவற்றுள் வெவ்வேறு ஜாதியினருக்கான புகைக் குழாய்கள் இருந்தன.





அப்போது, அந்த வரவேற்பு அறைக்கு வந்த நரேனின் தந்தை அவன் இப்படிச் செய்து கொண்டிருப்பதைக் கண்டு, கோபத்துடன் "நீ ஏன் எல்லா ஜாதியினருக்குமான ஹூக்காக்களை வாயில் வைத்து உறிஞ்சுகிறாய்?" எனக் கேட்டார். பிலே சிரித்தபடியே பதில் சொன்னான். "ஜாதிச் சட்டத்தை மீறினால் என்ன ஆகும் என்று பார்க்கிறேன்" என்றான். எல்லா ஹூக்காக்களும் அவனுக்கு சமமாகவே தெரிந்தன. எல்லா ஜாதியும் சமமானவையே என்பதை அவன் கண்டுகொண்டான்.

இது போலவே சுவாமிஜி (சுவாமி விவேகானந்தர்) இராஜஸ்தானில் பல ஜாதியைச் சேர்ந்த அன்பர்களுடன் பழகினார். மேலை நாட்டில் பல கிறிஸ்தவ அன்பர்கள் சுவாமிஜியின் அன்புக்கும், நட்புக்கும் உரியவர்கள் ஆனார்கள்.


உலகில் உள்ள அனைவரும் கடவுளின் குழந்தைகள். ஜாதி, மதப் பிணக்குகள் சமுதாயத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடும் எனும் கருத்தை சுவாமி விவேகானந்தர் சிக்காகோ பேரவையில் எடுத்து முழங்கினார். "சகோதர! சகோதரிகளே!" என்று அழைத்து அவர் ஆற்றிய உரை அந்த ஜாதி மத வித்தியாசங்களைக் கடந்து மக்கள் அனைவரும் சமம் என்ற உணர்வைத் தட்டி எழுப்புகிறது.

ஒவ்வொருவருடைய இதயத்திலும் இறைவன் இருக்கிறார் என்பதனால் ஜாதி ஏற்றத்தாழ்வை நாம் பார்க்கக்கூடாது.

# புராணச் சிறுவர்

## அஷ்டாவக்கிரன்

வேதாந்தம் உபதேசிக்கும் பெரியவரான உத்தாலகருக்கு கஹோளகர் என்ற சீடர் ஒருவர் இருந்தார். இவர் சிறந்த நியமமும் பக்தியும் உடையவர். ஆனாலும் இவருக்குக் கல்வி கற்கும் திறமை இல்லை. இதனால் மற்றைய சீடர்கள் இவரைப் பரிகசித்தார்கள். ஆனாலும் கஹோளகர் அதனைப் பொருட்படுத்தாமல் தன் குருவுக்கு சேவை செய்து வந்தார். அவரின் நற்குணத்தைக் கண்டு வியந்த உத்தாலகர் தன் மகள் சுஜாதையை கஹோளகரிற்கு விவாகம் செய்து கொடுத்தார். அவர்கள் இருவருக்கும் ஒரு மகன் உண்டாகினான். பிறக்கப் போகும் தன் குழந்தை ஆன்மீகத்திலும் அறிவிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்பினாள் சுஜாதை. எனவே வயிற்றில் குழந்தையோடு தானும் உத்தாலகரின் வேத வகுப்புகளுக்குச் சென்றாள். வயிற்றிலுள்ள குழந்தையால் அறிவையும் உணர்வையும் பெற முடியும் என்பது அன்றைய இந்துத் தாய்மாருக்கு நன்கு தெரியும். கல்வியில் மந்தமான கஹோளகர் வேதங்களைப் பிழையாக அத்தியயனம் செய்வதை வயிற்றுக்குள்ளிருந்து குழந்தை கேட்டு அதைப் பொறுக்கமுடியாது கருவிலேயே எட்டுக்கோணல் அடைந்தே பிறந்தது. இதனால் அக்குழந்தைக்கு அஷ்டாவக்கிரன் (எட்டுக் கோணல் உடையவன்) என்ற பெயர் சூட்டப்பட்டது.



ஒருநாள் ஜனக மன்னரின் அவையில் இடம்பெற்ற விவாதத்திற்கு கஹோளகர் சென்றார். அங்கு 'வந்தி' என்பவன் அவரை விவாதத்தில் தோற்கடித்து நீரில் மூழ்கச் செய்துவிட்டான்.




எனவே அஷ்டாவக்கிரனை உத்தாலகர் வளர்த்தார். இவன் பன்னிரண்டு வயதிற்குள்ளேயே வேதங்களை ஓதி முடித்து வித்துவானாக வளர்ந்தான். தன் தந்தையைத் தோற்கடித்த பண்டிதரைத் தான் வாதிட்டுத் தோற்கடிக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

ஒருநாள் மிதிலையில் ஜனகன் ஒரு பெரிய யாகம் நடத்துவதாகவும் அங்கு வித்துவான்கள் கூடி, சாஸ்திரங்களை வாதிப்பார்கள் என்றும் கேள்விப்பட்டு அஷ்டாவக்கிரன் மிதிலைக்குச் சென்றான். இவ்வாறு செல்லும் வழியில் அரசனும் அவனது பரி-வாரமும் சென்று கொண்டிருந்தார்கள். "விலகு! விலகு! இராஜாவுக்கு வழிவிட்டு விலகு!" என்று மெய்ப்பாதுகாவலர்கள் அஷ்டாவக்கிரனை விலகச் சொன்னார்கள். அதற்கு அவன், "இராஜ சேவகர்களே! குருடனுக்கும், பெண்களுக்கும், சுமை தூக்கிக் கொண்டு செல்பவர்களுக்கும் அரசனேயானாலும் விலகி வழி விட வேண்டும். பாதையில் வேதம் ஓதிய அந்தணன் சென்று கொண்டிருந்தால் அவனை விலகிச் செல்லும்படி அரசன் சொல்லலாகாது. இவ்வாறு சாஸ்திரம் கூறுவது உமக்குத் தெரியாதோ?" என்றான். அதற்கு அரசன், "சிறுவன் கூறுவது சரியே! நெருப்பில் சிறியதென்றும் பெரியதென்றும் இல்லை. சிறு நெருப்பும் சுடும்!" என்று கூறி வழிவிட்டான்.




அஷ்டாவக்கிரன் யாகசாலையை அடைந்த பொழுது வாயிற்காப்போர்கள் "இந்த இடத்திற்குச் சிறுவர்கள் செல்லக்கூடாது. வேதம் ஓதியவர்களே செல்ல முடியும்" என்று கூறித் தடுத்தார்கள்.

அதற்கு அஷ்டாவக்கிரன் "நான் சிறுவன்தான். அத்துடன் வேதமும் ஓதியவன். வயதையும் வெளித்தோற்றத்தையும் பார்த்து ஒருவனை எடைபோடக் கூடாது" என்றான். அதற்கு துவாரபாலகன், "நில். வீண் பேச்சுப் பேசாதே. தற்புகழ்ச்சி வேண்டாம். சிறுவனாகிய நீ எப்படி வேதம் கற்றிருக்க முடியும்?" என்று அதட்டினான். அதற்கு அஷ்டாவக்கிரன், "**வெளித்தோற்றம் அறிவுக்கு பிரமாணமாகாது.** முதிர்ச்சி என்பது சரீர வடிவத்தில் இல்லை. எவன் வேதங்களை அங்கங்களுடன் படித்து ஆராய்ந்து பொருள் அறிந்திருக்கிறானோ அவனே பெரியவன்.நான் அரச-னுடைய முக்கிய வித்துவானாகிய வந்திப் பண்டிதனைப் பார்க்க வந்திருக்கிறேன். ஜனக ராஜனுக்கு என் விருப்பத்தைத் தெரிவிப்பாயாக" என்றான். இதற்குள் அரசனும் வந்து விட்டான். நடந்தவற்றை அரசனுக்குத் தெரியப்படுத்தினர். அரசன் தான் முன்பு கண்ட சிறுவனே இவன் என்பதை அறிந்து கொண்டான். பின்னர் அரசன் அஷ்டாவக்கிரனிடம், "வித்துவான் வந்தி பல பெரிய பண்டிதர்களை வாதத்தில் தோற்கடித்து அவர்களை கடலில் வீழ்த்தும் படி செய்திருக்க, சிறுவனாகிய நீ ஏன் இந்தத் துணிச்சல் காரியத்தைச் செய்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அஷ்டாவக்கிரன், "உம்முடைய வித்துவான் என்னைப் போல வேதம் கற்றவர்களுடன் வாதிக்கவில்லை. பண்டிதர்களாகாதவர்களைத் தோற்கடித்து அகம்பாவம் கொண்டிருக்கிறார். என் தகப்பனாரையும் இவர் வென்று நீரில் மூழ்க வைத்ததாக அறிந்து கடன் தீர்க்கவே வந்திருக்கிறேன். அவரை அழைத்து வாருங்கள்" என்று பதிலளித்தான்.




அஷ்டாவக்கிரனுக்கும் வந்தி பண்டிதனிற்கும் இடையில் வாதம் நடத்தப்பட்டது. இதில் வந்தி பண்டிதன் தோல்வியடைந்து கடலில் அமிழ்த்தப் பட்டு

வருணாலயம் சென்றான். பண்டிதனின் அகம்பாவத்தைத் தன் அறிவுத் திறத்தால் தோற்கடித்தான் சிறுவனாகிய அஷ்டாவக்கிரன். வருணபகவானின் புத்திரனே வந்தி. அஷ்டாவக்கிரனின் வேண்டுகோளின்படி வந்தியால் நீரில் மூழ்கடிக்கப்பட்டவர்கள் அனைவரையும் வருண பகவான் விடுவித்தார். மீண்டுவந்த தந்தை கஹோளகரை அஷ்டாவக்கிரன் வணங்கினான். மகிழ்வடைந்த கஹோளகர் அஷ்டாவக்கிரனை சமங்க நதியில் நீராடச் சொன்னார். அவன் நீராடியதும் அவனது உடலில் இருந்த கோணல்கள் எல்லாம் நேராகிவிட்டன.



பிற்காலத்தில் அஷ்டாவக்கிரன் ஆன்மீக முதிர்ச்சி பெற்ற ரிஷி ஆகினான். அவர் ஜனக மன்னருக்கு உபதேசித்த விடயங்கள் 'அஷ்டாவக்கிர கீதை' என்ற பெயரில் இன்றும் பிரபலமாய் உள்ளன.

“வடிவத்தையும், வயதையும் பார்த்து மனிதனுடைய பெருமையை நிர்ணயிப்பது தவறு. வெளித்தோற்றம் ஏமாற்றத்தைத்தான் தரும்” என்பதைச் சிறுவனான அஷ்டாவக்கிரன் நிரூபித்துவிட்டான்.



பலவீனமின்றி, எல்லாவற்றையும் எதிர்கொண்டு சாவதற்கும் ஆயத்தமாய் இருப்பவன் மட்டுமே மகான்.

— சுவாமி விவேகானந்தர்

# யோகம்

கடந்த இதழில் சூரிய நமஸ்காரத்தைப் பற்றிய ஓர் அறிமுக விளக்கத்தைப் பார்த்தோம். இந்த இதழில் மேலும் சில விடயங்களைப் பார்த்துவிட்டு சூரியநமஸ்கார நிலைகளுக்குச் செல்வோம். நாம் முன்னர் கூறியவாறு சூரிய தேவனை நினைத்துப் பன்னிரண்டு மந்திரங்களை உச்சரித்து விட்டுத்தான் இப்பயிற்சிகளைத் தொடங்குவோம்.

அம்மந்திரங்களின் பொருள் பின்வருமாறு :

1. மித்ரா - அனைவருக்குமான ஒரு நண்பன்
2. ரவி - அனைவராலும் போற்றப்படுபவர்
3. சூர்யா - ஊக்கம் அளிப்பவர்
4. பானு - அழகூட்டுபவர்
5. ககா - உணர்வுகளை வலிமையாக்குபவர்
6. பூஷன் - புத்துணர்ச்சி தருபவர்
7. ஹிரண்ய கர்ப்ப - ஆற்றலையும் திறனையும் வளர்க்கும் சக்தி நிறைந்தவர்
8. மரீசி - நோய்களை அழிப்பவர்
9. ஆதித்ய - கவர்ந்திழுப்பவர்
10. சவித்ரு - சிருஷ்டிப்பவர்
11. அர்க்க - வணக்கத்திற்குரியவர்
12. பாஸ்கர - ஒளிமிகுந்து பிரகாசிப்பவர்

இப்பயிற்சியினைத் நாம் தொடர்ந்து செய்யுமிடத்துப் பின்வரும் பலன்களைப் பெற முடியும்.


1. கட்டுப்பாட்டுடன் கூடிய சீரான உடல் வளர்ச்சி
2. ஆரோக்கியத்துடன் கூடிய திறன் மிகுந்த உடல்
3. அமைதியுடன் கூடிய சமநிலையான மனநிலை
4. ஆழ்ந்த கவனத்துடன் கூடிய கூடுதலான செயல்திறன்
5. நினைவாற்றலுடன் கூடிய உணர்வுகளின் மீதான கட்டுப்பாடு



சூரிய நமஸ்காரம்

அடுத்து நாம் சூரிய நமஸ்காரம் செய்யக்கூடிய படிப்படியான முறை, பலன்கள் பற்றிப் பார்ப்போம்.

## ஆரம்ப நிலை



- உடலின் எந்தப் பகுதியிலும் வளைவின்றி நேராக நிற்கவும்.
- முன் கால்கள், குதிக் கால்கள், கால் மூட்டுக்கள் மற்றும் தொடைகளைச் சேர்த்து வைத்திருக்கவும்.
- உடல் நேராக முறுக்கின்றித் தளர்த்தி நிற்க வேண்டும்.
- உள்ளங்கைகள் இரண்டையும் சேர்த்துக் கூப்பி, நமஸ்கார முத்திரையில் நெஞ்சோடு இருக்குமாறு வைக்கவும்
- சுவாசத்தில் கவனம் செலுத்தி, முழுமையாக உள்மூச்சு மற்றும் மெதுவாக வெளிமூச்சு விடவேண்டும்.
- கண்களை மூடியவாறு, முகத் தசைகளைத் தளர்த்திப் புன்முறுவலோடு முகத்தை நேராக வைத்திருக்க வேண்டும்
- மனக்கண்களில் சூரிய உதயத்தினைக் கற்பனை செய்து தியான சுலோகத்தின் பொருளுணர்ந்து உடலில் அதனால் ஏற்படும் நுண்ணிய அதிர்வுகளைக் கூர்ந்து கவனித்தபடி ஜெபிக்கவும்.

· அடுத்த இதழில், சூரிய நமஸ்காரத்தின்
முதல் நிலையிலிருந்து அவற்றின்
செய்முறை, பலன்களைப் பார்ப்போம்.

## உண்மைச் சம்பவம்

ஒரே நாளில் கோடீஸ்வரன் ஆகிவிடக் கூடிய வாய்ப்புத் தன்னைத் தேடி வந்தும் நேர்மையின் வழி நடப்பதற்காக 1.9 கோடி இந்திய ரூபா (இலங்கைப் பெறுமதி 4.5 கோடி) பணத்தை உரியவர்களிடமே திருப்பிக் கொடுத்த ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியதோடு மட்டுமின்றி இன்றைய காலகட்டத்திலும் நேர்மையான பல சாதாரண மனிதர்கள் நம்மத்தியில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள் என நிரூபித்தவர்தான் இந்தியாவின் குஜராத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டி ஓட்டுனர் ராஜு பர்வாத்.





## நேர்மையின் விலை


முச்சக்கர வண்டி ஓட்டுனராக மாதாந்தம் ரூபாய் 6000 வரை சம்பாதிக்கும் ராஜுவிற்கு 1.9 கோடி காசோலை எவ்வாறு கிடைத்தது? சமீபத்தில் ஒரு நாள் ராஜுவினதும் அவரது தாயாரினதும் பெயரில் 1.9 கோடிக்கான காசோலை கிடைக்கப் பெற்றதும் திகைப்படைந்து போன ராஜு, அதனோடு கூடவே வந்த கடிதத்தைப் படித்தார். அக்கடிதத்தில் ராஜுவின் குடும்பத்திற்கு உரித்தான தற்போது "டாடா நனோ" தொழிற்சாலை அமைந்துள்ள 10 பிகா நிலத்திற்கான (25000 சதுர மீற்றர் நிலம்) நஷ்ட ஈடு என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

டாடா நனோ தொழிற்சாலையின் நிலம் கையகப்படுத்தும் பணியை குஜராத் தொழிற்துறை மேம்பாட்டுக் கழகம் செய்து வருகிறது. சமீபத்தில் ஒரு பிகா நிலத்திற்கு குறிப்பிட்ட தொகை வீதம் டாடா நிறுவனம் நஷ்ட ஈடு வழங்கி வருகிறது. டாடா தொழிற்சாலை அமைந்துள்ள "சனாந்த்" பகுதியில் ராஜுவின் தந்தை வழியில் 10 பிகா நிலம் இருந்தது. ராஜுவின் தந்தை பல வருடங்களுக்கு முன் சில பிகா நிலத்தை 9 இலட்சத்திற்கு விற்றுவிட்டார். இன்று பல்வேறு குடும்பங்கள் அந்நிலத்தில்

வசிக்கின்றனர். ராஜுவின் தந்தை நிலத்தை விற்றபின்னும் நில உரிமை சட்ட பூர்வமாக மாற்றப்படாமல் இருந்துள்ளது.

அகமபாத்தில் வசிக்கும் ராஜு, 1.9 கோடிக்கான நஷ்ட ஈட்டுக் காசோலை கிடைத்ததும், உடனடியாக தொழிற்துறை மேம்பாட்டுக் கழகத்தை அணுகி காசோலையைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்! அதுமட்டுமல்லாமல், அந்த நிலத்திற்கான உரிமையைச் சட்டப்படி உரியவர்களுக்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

இது குறித்து அதிகாரிகள் ராஜுவிடம் விசாரித்தனர். “இந்தக் காசோலையை நான் ஏற்றுக்கொண்டிருந்தால் அதிகாரிகள் அந்நிலத்தில் இருக்கும் வீடுகளை உடைத்திருப்பார்கள். அது மட்டுமில்லாமல் எனது பெற்றோர் சிறு வயது முதலே நேர்மையைக் கற்றுத் தந்துள்ளார்கள். **நேர்மையாகக் கிடைக்காத எந்தப் பணத்தையும் நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்”** எனக் கூறி தன் தாயையும் பெருமையில் ஆழ்தியுள்ளார் ராஜு என்னும் இந்த ஆட்டோ ஓட்டுனர்.




ரூ.6000 மாதாந்த வருமானம், சிறிய வீடு, மனைவி, 3 பிள்ளைகள், மற்றும் தனது தாயாருடன் வசித்து வரும் இந்த ராஜுவின் எளிமையான ஆனால் மனநிறைவான வாழ்க்கை எத்தனை கோடி பணம் கொடுத்தாலும் நேர்மை வழி நில்லாத எவருக்கும் கிடைக்காது என்று கூறினால் அது மிகையாகாது.

இப்படி ஒரு பெரிய தொகை தமக்குரியதல்ல என இதுவரை எவருமே மறுத்து திருப்பியளித்ததில்லை எனத் திகைப்பில் திக்குமுக்காடிப் போயுள்ளனர் குஜராத் தொழிற்துறை மேம்பாட்டுக் கழகத்தினர். அவர்களுக்குத் தெரியாது, நேர்மையின் விலை 1.9 கோடியைவிட அதிகம் என்று! நம்மத்தியில் வாழும் சாதரண மனிதர் ராஜு நேர்மைக்கோர் எடுத்துக் காட்டல்லவா நண்பர்களே? நாமும் நேர்மை வழி நடக்க என்றென்றும் முயல்வோமாக.

- ஆக்கம்: க. அறூாஷியன் -

# குறுக்கெழுத்துப் போட்டி



விடைகள்
அடுத்த இதழில்...

**இடமிருந்து வலம்**

1. துருவனிடம் நாரத முனிவர் கூறிய மந்திரம் - “ஓம் நமோ பகவதே ________.” (5 எழுத்து)
4. சித்தார்த்தனை புத்தராக மாற்றிய காரணிகளுள் ஒன்று. (வலமிருந்து இடம்)
7. அழகாபுரிப் பட்டினத்தின் தலைவன்.

**மேலிருந்து கீழ்**

1. யோகாசனத்தில் பிணவடிவத்தையுடைய ஓய்வு நிலையை இவ்வாறு அழைப்பர். (5 எழுத்தில் ஒன்று இடம்மாறியுள்ளது)
2. கதாதரனின் தந்தையாருடைய பெயர்.
3. கங்கையினுடைய உற்பத்தி ஸ்தானமாகக் கருதப்படும் ஏரி.
4. இரண்டு அல்லது மூன்று நதிகள் சந்திக்கும் இடம் இவ்வாறு அழைக்கப்படும்.
5. “நின்று தளரா வளர் ________ தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்”.
6. ஸூநிதியின் மகனின் பெயர்.

உதவி: தெரியாத விடைகளைக் கடந்த இதழில் தேடுங்கள்...

## சர்வதேசத்தில் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள்




♦ அமெரிக்க இந்து சுயம் சேவக சங்கம் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது தின ஓராண்டுக் கொண்டாட்டத்தை ஜனவரி, 12, 2013 அன்று 100 இடங்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. இவ்வாண்டு முழுவதற்குமாக 'விவேகானந்தருடன் விடுமுறை' மற்றும் யோகா விழா எனப் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

---

♦ வாஷிங்டன் (அமெரிக்கா) காளி கோவிலைச் சேர்ந்த உலக சமய நிறுவனம் உலக சமயப் பாராளுமன்றத்தின் ஒத்துழைப்புடன் சர்வ சமய மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்ச்சி 1893ஆம் ஆண்டு சர்வ சமயப் பேரரங்கில், பொறுத்துக் கொள்வது, ஏற்றுக் கொள்வது, இவற்றின் மூலமாகத் தீமைகள் அனைத்தையும் விரட்டிப் புதிய உலகம் அமைக்க முழங்கிய சுவாமி விவேகானந்தரைக் கொண்டாடும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

---

♦ நியூயோர்க்கில் ஆயிரம் தீவுப் பூங்காக் கூட்டுறவுச் சங்கம் 'செயின்ட் லாரன்ஸ் அவன்யு' மற்றும் லோரன்ஸ் நதியின் கிழக்குக் கரை வீதிக்கு அருகிலான கரையோரத்தை 'விவேகானந்தர் துறை' என்று பெயரிட்டுள்ளது.



---

♦ பிரான்ஸ் நாடு சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஜெயந்தி தினக் கொண்டாட்டத்தைத் தொடங்குவதில் 2ஆவது நாடாகப் பெருமை பெறுகிறது. அங்கு சுவாமிஜி தங்கிய இடத்தில் ஒரு கல்வெட்டு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. 2012, 2013களில் நாடு முழுவதும் பல தொடர் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

♦ இரஷ்யாவில் 13-12-2012 அன்று ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 175வது பிறந்த நாள் மற்றும் சுவாமி விவேகானந்தரின் 150வது பிறந்த ஆண்டு என்பன பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

♦ பிரிட்டனில் பெப்ரவரி, 2, 2013 அன்று பிரிட்டிஷ் பாராளுமன்றம், சுவாமிஜி தமது சொற்பொழிவுகளின் மூலம் உலக அளவில் சமயங்களுக்கு இடையேயான கருத்துப் பரிமாற்றத்தையும் நல்-




லிணக்கத்தையும் ஊக்குவித்து, மனித குலத்திற்கு வழங்கிய கொடையைப் பாராட்டி முதல் தீர்மானத்தை நிறைவேற்றியது. மேலும் அவர் மக்களை, சுயநலமின்றிப் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சேவை செய்ய ஊக்குவித்து, வேற்றுமைகளற்ற சமுதாயத்தை உருவாக்கியதை பிரிட்டிஷ் பாராளுமன்றம் பதிவு செய்தது.

♦ லண்டனில் உள்ள பல்கலைக்கழகங்களில் சுவாமிஜி பற்றிய தொடர் சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டன.



♦ நேபாளம், காட்மண்டுவில் ஜனவரி, 12, 2013 அன்று சமுதாய முன்னேற்றத்திற்கான சுவாமிஜியின் பங்களிப்பைப் பாராட்டி நேபாளத் தலைவர் ராம்பரன் யாதவ் உரையாற்றினார்.

♦ ஜப்பான், டோக்கியோவில் 27-07-2012 அன்று இந்திய தூதரக அலுவலகத்தின் அரங்கில் சுவாமிஜியினது 150ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. அந்நிகழ்வு "சுவாமிஜியின் செய்திகள் இன்றைய பிரச்சினைகளைத் தீர்த்து உயர் உணர்வு நிலை அடைய எவ்வாறு உதவுகின்றது" என்பது பற்றிய கருப்பொருளை நோக்கமாகக் கொண்டு நிகழ்ந்தது.



♦ பாகிஸ்தானில் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஜயந்தி தின விழா, பல கலை நிகழ்ச்சிகளுடன் இந்துக்களால் கொண்டாடப்பட்டது.

♦ அவுஸ்திரேலியாவில் 17-03-2012 அன்று இந்து சுயம் சேவக சங்கம் - கான்பெரா, சுவாமிஜியின் 150ஆவது பிறந்த நாள் விழாவை HTCC ப்ளோரி கோயிலில் சிறப்பாகக் கொண்டாடியது.



♦ ஸ்பெயினில் சுவாமிஜியின் 150ஆவது ஜயந்தி தின நிகழ்வு 6 நாட்கள் புத்தகக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள், 'வீரநரேந்திரா' திரைப்படம், சிறப்புப் பூஜை, யோகா பற்றிய உரை, இளைஞர் குழுக்களின் சேவை, உடல் நல முகாம், சர்வ சமய மாநாடு என்பவற்றோடு சிறப்பாக நடைபெற்றது.

## செய்திகள்





அறநெறி அமுதத்தின் 13ஆவது அமுதத்தின் 3ஆவது துளி 28.07.2013 அன்று கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி ஆசிரியை செல்வி சந்திரகுமாரி அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.




பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களான சுவாமி இராமகிருஷ்ணானந்தர், சுவாமி நிரஞ்ஜனானந்தர், சுவாமி அத்வைதானந்தர், சுவாமி அபேதானந்தர், சுவாமி அகண்டானந்தர் ஆகியோரின் ஜெயந்தி தினங்கள் முறையே ஆகஸ்ட் 4, 21, செப்டம்பர் 4, 28, ஒக்டோபர் 4ஆம் திகதிகளில் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டன.





இந்துக்களின் புனித நூலான பகவத் கீதையை அருளிய ஸ்ரீ கிருஷ்ணனின் ஜெயந்தி தினம் ஆகஸ்ட் 28 ஆம் திகதி அன்று இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. செப்டம்பர் 29 ஆம் திகதி அன்று ஸ்ரீ கிருஷ்ணனின் ஜெயந்தி தினமும் சமய பாடசாலையின் 61ஆவது ஆண்டு விழாவும் மாணவர்களால் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பஜனை, பேச்சு, நடனம், நாடகம், யோகாசனம் போன்ற கலை நிகழ்வுகள் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டன. அன்றைய தினம், முன்னாள் காவல்துறைப் போக்குவரத்துப் பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் திரு க. அரசரத்தினம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து விழாவை சிறப்பித்ததோடு மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகையான 'விவேகவாஹினி'யையும் வெளியிட்டு வைத்தார்.











---




இந்துக்களின் முதல் வணக்கத்துக்குரிய விநாயகப் பெருமானுக்குரிய சதுர்த்தி தினமானது செப்டம்பர் 9 ஆம் திகதி அன்று ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் செப்டம்பர் 18ஆம் திகதி அன்று சமய பாடசாலை மாணவர்களால் கலை நிகழ்வுகளுடன் கொண்டாடப்பட்டது.


---

துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய முப்பெருந்தேவியரின் அருள் வேண்டி நவராத்திரி தினமானது ஒக்டோபர் 5ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. தினமும் தேவி மஹாத்மிய பாராயணம் இடம்பெற்றதுடன் மகாஅஷ்டமி அன்று சிறப்பு ஹோமம் இடம்பெற்றது. இறுதி நாளான விஜயதசமி அன்று


ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி மகராஜ் அவர்களால் பல சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்டது. 27 ஆம் திகதி சமய பாடசாலை மாணவர்களால் நவராத்திரி விழா கலை நிகழ்வுகளுடன் கொண்டாடப்பட்டது.



சுவாமி விவேகானந்தரின் வழிகாட்டலின்படி 'சொந்த முக்தி, உலக நன்மை' ஆகிய இலட்சியங்களுடன் இயங்குகிறது இராமகிருஷ்ண மிஷன். அவ்வகையில் பல தசாப்தங்காளாக போர்ச் சூழலில் சிக்கித் தவித்த கிளிநொச்சி மக்களின் நன்மை கருதி பாரதிபுரத்தில் **சுவாமி விவேகானந்தர் கல்வி நிலையம்** கடந்த 20.10.2013 அன்று பூஜை, ஹோமம் அகியவற்றுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிலையத்தில் சிறுவர்களுக்கான சமய பாடசாலை, கணணித் தொழிநுட்ப வகுப்புகள் போன்ற செயற்பாடுகள் நடைபெறவுள்ளன.













(15ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உலகியல் ஆசைகளில் மூழ்கி, அதன் வசப்பட்டு, நோக்கங்கள் ஏதும் இன்றி இயந்திர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை இன்றும் கலங்கரை விளக்கமாகத் திசை காட்டி நிற்கின்றது. இந்தச் சம்பவம், நாமும் சிறிதளவேனும் இறைவனை சிந்தனையில் திழைக்க வேண்டும் என்று எம்மைத் தூண்டுகிறது. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அர்த்தம் பொதிந்த வாழ்வியல் சம்பவங்களூடு தொடர்ந்து பயணிப்போம்...



## படம் தரும் பாடம்

மேலுள்ள படத்தின் மூலம் எமக்கு என்ன தெரிகிறது? யாரோ ஒரு மனிதன் குளிர்பானம் அருந்தி விட்டு எறிந்த ஒரு கொள்கலனைக் காகம் ஒன்று தன் அலகால் கொத்திச் சென்று குப்பைத் தொட்டியில் போடுகிறது.

ஆறறிவு படைத்த மனிதர்கள் நாம், பாட-சாலை, பல்கலைக் கழகம் போன்றவற்றிற்குச் சென்று பலவும் கற்றுப் பட்டங்களையும் பரிசுகளையும் பெறுகிறோம். ஆனால் சாப்பிடுவதையும் அருந்துவதையும் எடுத்துவிட்டுக் குப்பைகளை அதே இடத்திலோ வீதி ஓரங்களிலோ எறிந்துவிட்டுச் செல்வதை எமது பழக்கமாக ஆக்கிவிட்டோம். மூத்தோர் அறிவுரை கூறினால் “சுத்திகரிப்பு ஊழியர்கள் துப்பரவு செய்வார்கள்” என்று கூறி அவர்களது அறிவுரையை அலட்சியப் படுத்துகிறோம்.

ஆனால் இந்தக் காகமோ யாரோ ஒருவர் போட்ட குப்பையைத் தானே எடுத்துச் சென்று குப்பைத் தொட்டியில் இடுகிறது. இக் காகம் மனித சமுதாயத்திற்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இன்றிலிருந்து நாமும், எங்களது குப்பைகளையாவது குப்பைத் தொட்டியில் மட்டுமே இட்டு சூழலைச் சுத்தமாக வைத்திருப்போம்.

# உங்கள் சிந்தனைக்கு...

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த அந்த இளைஞனின் குடும்பம் வறுமையில் வாடியது. தனக்கு ஒரு வேலை கிடைத்தால் குடும்பத்தின் வறுமை நீங்குமே என்று கருதி வேலை தேடி ஒவ்வொரு அலுவலகமாக ஏறி இறங்கினான் அவன். எல்லா இடத்திலும் "வேலை இல்லை" என்ற பதிலே வந்தது. எனினும் அவன் மனம் தளரவில்லை. "விடாமுயற்சி வெற்றியைத் தரும்" என்ற நம்பிக்கை அவனிடம் இருந்தது.

ஒரு நாள் வேலை தேடி ஒரு அலுவலகத்திற்குச் சென்றான். அங்கும் "இல்லை" என்ற வழக்கமான பதிலே கிடைத்தது. ஏமாற்றத்துடன் திரும்பிவரும்போது வாசலில் கிடந்த ஒரு சிறு பொருளைக் கண்டு எடுத்தான். அதைக் கண்ட அந்த அலுவலக மேலாளர் அது அலுவலகத்திற்குரிய பொருளாக இருக்குமோ என நினைத்து அவனை அழைத்து விசாரித்தார்.

இளைஞனும் அப்பொருளை எடுத்துக் காட்டினான். அது ஒரு சிறிய குண்டூசி! அதைக் கண்ட மேலாளர் அவனது அவதானத் திறனைக் குறித்து மிகுந்த வியப்படைந்தார். உடனே அந்த இளைஞனுக்குத் தனது அலுவலகத்திலேயே ஒரு வேலை கொடுத்தார். பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த அந்த இளைஞன்தான் தனது அயராத உழைப்பாலும் அறிவுக் கூர்மையாலும் பிற்காலத்தில் உலகப் புகழ் பெற்ற வங்கியாளராகத் திகழ்ந்த லபைட்.

மாணவர்களாகிய நாமும் சிறுவயதிலிருந்தே சிறிய பொருளெனினும் அதனை அலட்சியப்படுத்தாது பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்புணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுவே பின்னொரு காலத்தில் பல உயரிய செயல்களுக்கு அடிப்படையாக அமையும்.

அன்பளிப்பு ரூ. 10.00